# மதச்சார்பின்மை பற்றிய அரசியல் விவாதம்

- க. சண்முகலிங்கம் -


இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறையில் இருந்தது. அந்த யாப்பு மதச்சார் பின்மையை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டிருந்தது. 1972ல் அரசியல் யாப்பு இலங்கையில் மதச்சார்பின்மைக் கொள்கையைக் கைவிடுவதற்கு வழியமைத்தது. இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமிய சிறு பான்மை மதப்பிரிவினர்களின் மதச்சுதந்திரங்கள் படிப்படியாகப் பறிபோகும் நிலை இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

மேற்குலகில் மதச்சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முறையில் மதச்சார்பின்மைக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் உபாயங்களைப் பற்றி லிபரல் ஜனநாயகவாதிகளும், இடதுசாரி சிந்தனையாளர்களும் விவாதிக்கிறார்கள்.

இந்த விவாதங்கள் எமக்குப் பயன் தருவன. இக்கட்டுரையில் சாள்ஸ் ரெயிலர் (Charles Tailor) என்ற கனடா தேசத்து அரசியல் அறிஞரின் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளேன். அவ் அறிஞர் எழுதிய The meaning of Secularism என்ற தலைப்பிலான கட்டுரையில் இருந்து அவரது கருத்துக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

மதச்சார்பின்மை அரசு என்னும் கருத்தை இன்னும் ஆழமாகப் பரிசீலிக்கும்போது, இது சிக்கலான ஒரு கருத்து என்பது தெரியவரும். மதச்சார்பின்மையின் பயன்கள் அல்லது அதனால் அடையப்பெறும் நன்மைகள் மூன்று ஆகும். பிரஞ்சுப் புரட்சியின் இலக்குகளாக அல்லது இலட்சியங்களாக அமைந்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று கருத்துக்களின்படி இப்பயன்களைப் புரிந்துகொள்ளலாம். சமயநம்பிக்கை தொடர்பாக கட்டுப்பாடுகள் இருத்தலாகாது. இது மதச்சார்பின்மையின் முதலாவது நிபந்தனை. இதனையே சமய நம்பிக்கை அல்லது சமய வழிபாட்டுச்சுதந்திரம் என்பர். இச்சுதந்திரம் சமய நம்பிக்கை அற்றவராக ஒருவர் இருப்பதற்கான உரிமையையும் உள்ளடக்கியது. ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்புக்கான முதலாவது திருத்தம் சமயவழிபாட்டுச் சுதந்திரத்தை அழுத்திக் கூறுகிறது. இரண்டாவதாக ஒரு அரசின் கீழ் வாழும் மக்களிடையே நிலவும் வெவ்வேறு சமயங்களிடையே சமத்துவம் இருத்தல் வேண்டும், எந்தவொரு மதமும் சலுகைபெற்ற மதமாக இருத்தல் ஆகாது. மூன்றாவதாக குறித்த சமூகத்தின் அல்லது தேசத்தின் அரசியல் அடையாளம் யாது? அத்தேசம் தனது இலக்குகளை எவ்வழிகளில் அடையப்போகின்றது என்பதைத் தீர்மானிப்பதிலும் முடிவு செய்வதிலும் எல்லாச் சமயப்பிரிவினரும் பங்கேற்பவராக இருத்தல் வேண்டும். எல்லோரதும் இணக்கமும் வேண்டும் என்ற இந்த விதியே சகோதரத்துவம் (Fraternity) குறித்து நிற்கிறது.

இந்த மூன்று இலக்குகளும் ஒன்றோடொன்று முரண்பாடு உடையன. ஆகையால் சில வேளைகளில் இவற்றிற்கிடையே ஒரு சம நிலையைப் பேணும் தேவை உள்ளது. மேற்குறித்த மூன்று இலக்குகளுடன் நான்




காவது இலக்கு ஒன்றையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனை மூன்று இலக்குகளையும் இணக்கம் செய்தலும், சமரசம் செய்து ஐக்கியத்தை உருவாக்குதலும் என்று கூறலாம். அதனையே 'சகோதரத்துவம்' என்ற இலக்கும் குறித்து நிற்கிறது. ஆதலால் முன்னைய மூன்று இலக்குகள் மட்டுமே மதச்சார்பின்மையின் முக்கிய அம்சங்களை விளக்கப்போதுமானவை.

மேற்குறித்த இலக்குகளையும் அவை உள்ளடக்கியுள்ள தத்துவங்களையும் எக்காலத்துக்கும் எல்லா நாடுகளிற்கும் பொருந்துவதான பொதுத் தத்தவங்களாகக் கருதுதல் முடியாது. இவை சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்பப் பிரயோகிக்கப்பட வேண்டியவை. பிரஞ்சுப் புரட்சிவாதிகளான யக்கோபின்ஸ் (Jacobins) இதனை பகுத்தறிவின்படி ஏற்றுக்கொள்ள வேண்டியது. கால தேச எல்லைகளைக் கடந்த பொதுவான விதிகள் என்றே கருதினர். நவீன காலத்து அரசியல் அறிஞர் யோன் றோல்ஸ் (John Rawls) அவர்களும் இவ்வாறான கருத்தை உடையவராகவே காணப்படுகிறார். ஆயினும் இவற்றைக் கால எல்லையைக் கடந்த பொதுத் தத்துவங்கள் (Timeless Principles) என்று கொண்டால் சில சமயக்குழுக்களின் சுதந்திரம் பறிக்கப்படும். இது சகோதரத்துவம் என்ற தத்துவத்திற்கு முரணானது. மூன்றில் ஏதாவது ஒன்றிற்கு முதன்மையளித்து மதச்சார்பின்மையைச் செயற்படுத்துதல் பல முரண்பாடுகளையும் சிக்கல்களையும் புகுத்திவிடும்.

மேற்கு நாடுகளின் சமீபகால வரலாற்றை எடுத்து நோக்கினால் அந்நாடுகளின் மக்களின் சமயங்களின் சனத்தொகைக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிறிஸ்தவ நாடுகளில் இன்று முஸ்லிம்கள் பெருந்தொகையில் வாழ்வதைக் காணலாம். இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் போன்ற பல்வேறு மதத்தினரும் ஐரோப்பியப் பெருநகரங்களில் வாழ்கின்றனர். அமெரிக்காவிலும் இவ்வாறான நிலையே காணப்படுகிறது. அண்மையில் முஸ்லிம் மாணவிகள் 'ஹியாப்' என்னும் இஸ்லாமிய மரபு உடையுடன் பாடசாலைக்குச் செல்ல முடியாது என்று பிரான்ஸ் நாடு சட்டம் இயற்றியமை ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது. தமது சமய அடையாளங்களை பொது நிறுவனங்களில் பிறர் கண்ணில் உறுத்தும் வகையில் பகிரங்கமாக வெளிப்படுத்துதல் மதச்சார்பின்மை தொடர்பான அடிப்படைத் தத்துவங்களிற்கு ஊறுசெய்வன என்பது 'ஹியாப்' தடைக்குப் பிரான்ஸ் கூறக்கூடிய நியாயம் ஆகும். ஆயினும் சமய வழிப்பாட்டில் பூரண சுதந்திரம் என்ற உரிமை இங்கே மீறப்படுகின்றது என்பதும் உண்மையே. ஆகவே இரண்டாவது இலக்கான சமயங்களிடையே சமத்துவம் என்னும் தத்துவத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப் புறப்படும்போது, சுதந்திரம் என்னும் இலக்கு பலியிடப்படுகின்றதைக் காண்கிறோம்.

ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றை எடுத்து நோக்கினால் 19ம் நூற்றாண்டில் அந்நாட்டின் ஜனநாயக மரபுகள், விழுமியங்கள் என்பனவற்றுடன் அமெரிக்காவின் கத்தோலிக்க மதம் ஒன்றினைய முடியாது. அம் மதம் ஜனநாயக மதம் என்று கருதப்பட்டது. இன்று ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இஸ்லாத்தை சந்தேகத்தோடு பார்ப்பது போல் அக்காலத்தில் அமெரிக்கர்கள் கத்தோலிக்கத்தைச் சந்தேகத்துடன் நோக்கினர். ஆனால், 19ம் நூற்றாண்டுக்குப் பிந்திய வரலாறு வேறு விதமாக அமைந்தது. கத்தோலிக்கம் மாற்றமடைந்தது. உலகக் கத்தோலிக்கமும் பல மாறுதல்களை அடைந்தது. இன்று கத்தோலிக்கத்தை அமெரிக்க மக்கள் சகிப்புத் தன்மையோடும், தாராள உணர்வோடும் ஏற்றுக்கொண்டனர். ஒவ்வொரு மதமும் மாறாத சிலபொது இயல்புகளைக் கொண்டவை. அவை எக்காலமும் மாறாமல் நிலைத்திருக்கும் என்று நாம் கூறமுடியாது அல்லவா? எதிர்காலத்தில் இஸ்லாம் மாறமாட்டாது என்று எப்படிக் கூறமுடியும்? அவ்விதம் இஸ்லாம் மாறக்கூடும் என்றால் நாம் முற்சாய்வு உடையவர்களாய் பன்மைப்பண்பாடுகளை மதிக்காமல் தவறான முகாமையைச் செய்தோம், குற்றச்சாட்டுக்கு ஆளாவோம். இஸ்லாத்தின் மாறா இயல்பைத் தீர்மானிக்கும் காரணியாக எமது தவறுகள் தாம் அமையப்போகின்றன என்றே கூறலாம்.

எமது தவறுகளின் அடிப்படை மதச்சார்பின்மை அரசு என்பதை நாம் பொருள் கொள்ளும் முறையிலேயே உள்ளது. நாம் தவறான மாதிரி ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரியின்படி அரசுக்கும் மதத்திற்கும் எவ்வித ஒட்டோ, உறவோ

தொடர்தல் 78ம் பக்கம்

ARTLINK MULTIMEDIA INC
Your Designing Solutions
Printing SERVICES
▸ Catalogue
▸ Brochure
▸ Flyer
▸ Banner
▸ Folders
▸ Labels
▸ Annual Reports
▸ Posters
▸ Real Estate Signs
REAL ESTATE PHOTOS WITH RETOUCH
Innovative, highly creative, good at thinking
"OUT OF THE BOX"
Dir: 416 317 2693
www.artlinkmultimedia.ca




# மதச்சார்பின்மை...

77ம் பக்கத் தொடர்ச்சி...

இருக்கக்கூடாது என்று எண்ணுகிறோம். உண்மையாதெனில் மதத்துடன் அரசு ஒட்டோ உறவோ கொள்ளக்கூடாது என்று கருதலாகாது. ஜனநாயக சமூகத்தின் பன்மைத்துவம் தொடர்பாக அரசு சரியான பதிற்குறியை (Correct Response) வெளிப்படுத்த வேண்டும் சிறுபான்மையினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும். அவர்களை சகோதரத்துவ மனப்பாங்குடன் ஏற்றுக்கொள்வதையுமே அரசின் சரியான பதிற்குறி என விளக்கலாம். அரசின் நடுநிலை என்பது ஒரு சமயத்தின் குறித்த கொள்கை அல்லது நடைமுறையை ஆதரிப்பதோ, நிராகரிப்பதோ அன்று. இஸ்லாம் மதத்தைவிட கிறிஸ்தவத்திற்குக் கூடுதல் ஆதரவு கொடுக்கக் கூடாது என்பதோடு எந்த மதத்திலும் நம்பிக்கை அற்றவராக இருத்தலையும் ஆதரிப்பதோ எதிர்ப்பதோ ஆகாது என்பதே பொருள். ஒருவரின் அடிப்படையான நம்பிக்கையை மதிக்கிறோம் என்பதே முக்கியமான விடயம்.

அரசு - திருச்சபை தொடர்புகளை நீக்குதல், பொதுத்துறை நிறுவனங்களின் நடுவு நிலை என்ற இரண்டும் மிக முக்கியமான வையே. ஆயினும் நாம் மதச்சார்பின்மையை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவனங்களில் ஆரம்பித்து அவை அடைய வேண்டிய இலக்குகளைப் பற்றி சிந்திப்பதை விடுத்து இலக்குகளில் ஆரம்பித்து நடைமுறை எப்படி இழக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

முஸ்லிம் மாணவிகள் பாடசாலைக்கு செல்லும் போது 'ஹியாப்' அணிதல் பற்றிய பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். இது பல மேற்கு நாடுகளின் ஜனநாயக அரசுகளுக்கு தலையிடியான விடயமாக உள்ளது. பிரான்ஸ் நாட்டில் 2004ம் ஆண்டில் ஸ்ரசி விசாரணைக்குழு ஹியாப் அணிதலைத் தடைசெய்யும் முடிவை அறிவித்தது. யேர்மனியில் இவ்விடயம் வேறுவிதமாக முடிவு செய்யப்பட்டது. அங்கு மாணவிகள் இஸ்லாமிய உடையை அணியலாம். ஆனால் ஆசிரியர்கள் அவ்வுடையுடன் பாடசாலைக்கு வரமுடியாது என அறிவிக்கப்பட்டது. ஐக்கிய இராச்சியத்திலும் பிறநாடுகள் சில வற்றிலும் இவ்விடயம் பற்றிய முடிவை ஒவ்வொரு பாடசாலை நிர்வாகமும் எடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. இவ்விதம் வேறுபட்ட முறையில் தீர்மானங்கள் அமைந்ததற்கான காரணம் யாது? இவ்விடயத்தில் சட்டம் இயற்றும் அதிகாரம் உடையோரும், நிர்வாக அதிகாரம் உடையோரும் இலக்குகளை சமநிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பதே இதற்கான பதிலாகும். இங்கே சமநிலை காண்பதற்கு முயற்சிக்கும் இலக்குகள் இரண்டு உள்ளன. பொதுத்துறை நிறுவனங்களான பாடசாலைகள் வெவ்வேறு சமயங்கள் தொடர்பாகச் சமத்துவத்தைப் பேணவேண்டும் என்பது முதலாவது இலக்காகும். இரண்டாவது இயன்றளவுக்கு ஆகக் கூடிய சமய சுதந்திரத்தை முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்குவது என்பதாகும். அவர்களது சமய நம்பிக்கைகளுக்குத் தடையற்ற சுதந்திரத்தை வழங்கவேண்டும் என்ற முடிவுக்கு இது இட்டுச் செல்லும். இதற்கு எதிராகப் பல வாதங்கள் முன் வைக்கப்பட்டன. யேர்மனியில் பொதுத் துறை நிறுவனங்களான பாடசாலைகளின் ஆசிரியைகள் இஸ்லாமிய உடையுடன் முகத்தை மூடிய முக்காடு அணிந்து பாடசாலைக்குச் செல்வது அரசின் நடுநிலையைப் பகிரங்கமாக மீறும் செயல் என்று கருதப்பட்டது. 'ஹியாப்' அணிதல் முஸ்லிம் பெண்களின் சுதந்திரமான செயல் (a free act) அன்று. பெண்களின் குடும்ப உறுப்பினர்கள் அவர்களை அவ்வாறு செய்யும்படி கட்டாயப்படுத்துகிறார்கள் என்ற வாதம் பிரான்சில் முன்வைக்கப்பட்டது. இந்த வாதம் அடிக்கடி முன்வைக்கப்படுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆயினும் சமூகவியல் ஆய்வுகள் இந்த வாதத்தில் உண்மையில்லை என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன. ஸ்ரசி விசாரணைக்குழு (Stasi Commission)இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.


இன்னொரு வாதமும் 'ஹியாப்' உடைக்கு எதிராகப் பிரான்ஸ் நாட்டில் முன்வைக்கப்பட்டது. 'ஹியாப்' அணிதல் சமய நம்பிக்கை, பக்தி என்பவற்றின் வெளிப்பாடு அன்று, அது பிரஞ்சுக் குடியரசின் மிக அடிப்படையான மதச்சார்பின்மை நிறுவனக் கட்டமைப்புகளை எதிர்க்கும் செய்கை என்று கூறப்பட்டது. ஹியாப் ஒரு 'Ostentatious Sign' (பிறருடைய கவனத்தை கவருவதற்கான வீம்புச்செயல்) என்று கருதப்பட்டது. இவ்வாறு கவனத்தை ஈர்க்கும் செய்கையாக இல்லாமல் ஒரு மறைமுகமான குறியீடாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் முகத்தை மூடும் முக்காடு உடை பிரச்சினைக்குரிய அறைகூவலும் அறிவிப்பும் என்று கூறப்பட்டது. இந்த வாதத்தின் முன்னால் முஸ்லிம் பெண்கள் தமது 'ஹியாப்' உடை ஒரு அடையாளம் அல்ல என்று கூறிய வாதம் எடுபடவில்லை.

ஹியாப் உடைக்கு மேற்குநாடுகள் வெவ்வேறுவகைக் கொள்கை முடிவுகளை எடுத்தன என்ற விடயம் ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. மதச்சார்பற்ற அரசின் இரண்டு இலக்குகளை சமன் செய்யும் தேவை உள்ளது என்பதே அவ்வுண்மையாகும். ஆயினும் சமன்செய்யும் தீர்வுக்கான எமது முயற்சிகளின் பின்னல் மதச்சார்பின்மையின் தத்துவங்கள் பற்றி எம்மிடம் இருக்கும் மாயை அல்லது பொய்மை வெளிப்படுகிறது. இந்த மாயை யாதெனில் 'ஹியாப்' போன்ற ஒரு பிரச்சினையில் ஒரே ஒரு தத்துவமே சம்மந்தப்பட்டுள்ளது, அரச மதவிவகாரங்களில் தூரவிலகி நிற்க வேண்டும், மதம் - அரசுப்பிணைப்பு அறுத்தல் பூரணமாக இருத்தல் வேண்டும் என்பதே முக்கியம் என்ற கருத்தாகும். இக்கருத்துடன் இணைந்த இன்னொரு விடயமாக மதங்களுக்கிடையே சமத்துவம் என்ற கருத்தையும் உயர்த்திப்பிடிக்கிறோம்.

இக்காரணத்தால் 'ஹியாப்' உடையை அனுமதித்தல் எப்படி நியாயமாகும் என்றும் வாதிடுகின்றோம். இதனை ஒரு தத்துவத்தை உயிரற்ற மூடப்பக்தியாக மாற்றுதல் (Fetishization) என்று கூறலாம். அரச நிறுவனங்கள் நடுவுநிலை என்ற தத்துவத்தை நடைமுறைப்படுத்தும் போது மதச்சார்பின்மையின் இலக்குகள் எவை? தாம் எடுக்கும் முடிவின் பயன் என்ன? என்பவற்றைச் சிந்திக்காமல் ஒரு தத்துவத்தை உயிரற்ற மூடப்பக்தியுடன் இறுகப்பற்றிக் கொள்வது நியாயமாகுமா? இதனைச்சிந்திக்கும் போதுதான் இவ்விடயத்தில் ஒரு தத்துவம் அல்லாமல் பல தத்துவங்கள் (Plurality of Principles) சம்பந்தப்படுகின்றன என்பது தெரியவரும்.

## முடிவுரை:

மேற்குலக ஜனநாயக அரசுகளின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றாக விளங்கும் மதச்சார்பின்மை பற்றி இன்று இந்நாடுகளில் தோன்றிய விவாதங்களின் பின்னணியில் இத்தத்துவம் பற்றிய விளக்கத்தை மேலே தந்துள்ளேன். பன்மைத்துவ சமூகங்களில் சிறுபான்மை மதக்குழுக்களின் உரிமைகள் எவ்வாறு பேணப்படலாம், அதற்கு மதச்சார்பின்மை தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன இக்கட்டுரையில் ஆராயப்பட்டன. இக்கட்டுரை சாள்ஸ் ரெயிலர் என்ற அரசியல் அறிஞர் எழுதிய The Meaning of Secularism என்ற ஆங்கிலக் கட்டுரையில் உள்ள கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டது.



hanmugalingam@thaiveedu.com